# கிருபையுள்ள வார்த்தை

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

**Vol - 18** | April ஏப்ரல் | 2017

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-




## நாம் செய்கிறது நியாயமல்ல,
## நாம் மவுனமாயிருந்து,...காத்திருந்தால்
## குற்றம் நம்மேல் சுமரும்;...அறிவிப்போம் வாருங்கள்

2 ராஜா 7:9

Art by Carpus Philemon


கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| சாறிபாத் விதவை | 3 |
| தேவன் எவ்வாறு நம் வாழ்வில்... | 6 |
| ஜெபம் - கெஞ்சும் இடம் | 7 |
| பரிசுத்தவான்களின் காணிக்கை | 8 |
| ஜீவபுத்தகத்தில் பெயரெழுதப்பட்டவர்கள் | 11 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,

**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

வெள்ளி காலை

**6** மணி முதல் **6-30** மணி

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

**தமிழன் T.V. யில்**

ஞாயிறு காலை 6-45 மணி

செய்தியாளர்

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,

(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.










**Advanced Bible Correspondence Courses Available in English.**

For Details:

**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**

P.O.Box 15, Arasaradi,
Madurai - 625 016. Tamilnadu

**கிருபையுள்ள வார்த்தை**

**உலக இரட்சகர் இயேசுவை உலகிற்கு அறிவிக்கும் உன்னத வார்த்தை**

**World Literature Publication**

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol. 91**

ஆசிரியர் உரை

# மௌனமாயிராதே... !

P.C. பிலேமோன் ராஜா



அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்களே ! நமது பாவங்களுக்காக மரித்து, உயித்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

இம்மாதம் நமது செய்திக்காக, வேதாகமத்தில் மௌனமாக இருந்தவர்களையும், அவர்கள் தேவ எச்சரிப்பினால் (அ) ஊக்கத்தினால் மௌனத்தைக் கலைந்து பெற்ற நன்மைகளைப் பற்றியும் பார்ப்போம்.

## 1. எஸ்தர்

**எஸ்தர் 4:13–14** மொர்தெகாய் எஸ்தருக்குத் திரும்பச் சொல்லச்சொன்னது : நீ ராஜாவின் அரமனையிலிருக்கிறதினால், மற்ற யூதர் தப்பக்கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே. நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள் : நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும், என்று சொல்லச்சொன்னான்.



ஆமானின் சதியினால், பேரரசன் அகோஸ்வரு தன் ராஜ்ஜியம் எங்கும் உள்ள யூதர்கள் அனைவரையும் கொல்ல உத்தரவு பிறப்பித்த போது, அதை மொர்தெகாய் ராஜாத்தியாகிய எஸ்தருக்கு அறிவிக்கிறார். மேலும் யூதர்களுக்காக ராஜாவிடம் வேண்டவும், மன்றாடவும் வேண்டும் என்னும் போது, எஸ்தரோ அரசர் அழைக்காமல் யாரும் செல்லக்கூடாது, அப்படி செல்பவர்கள் கொல்லப்படுவார்கள் என்றாள். அவளது இந்த மௌனத்தினை கலைத்து, யூதருக்காக பேசும்படி எச்சரிக்கிறார். மேலும் தேவன் உன்னை உயர்த்தியதே அதற்காக தான் என நினைவுபடுத்துகிறார்.

மொர்தெகாயின் வார்த்தைகள் எஸ்தருக்கு தன் உயிரை துச்சமாக எண்ண வைத்தது. அன்று எஸ்தரை யூதர்களின் இரட்சிப்பிற்காக பேச வைத்தது. அவள் ஒரு வேளை மௌனம் கலைக்காதிருந்தால், ஆண்டவர் இரட்சிப்பை வேறு வழியாக வரவைப்பார் என்றும், ஆண்டருடைய இரட்சிப்பின் வழிநடத்தலிலே எஸ்தருக்கு பங்கில்லாமல் போயிருக்கும் என்றும், அவளை உயர்த்தின ஆண்டவருக்கு அவள் நன்றியில்லாதவளாக மாறி, அவளும் அவளது குலமும் நிர்மூலமாகிவிடும் என்றும் மொர்தெகாய் எச்சரித்தார்.

மொர்தெகாய் தான் வளர்த்த எஸ்தரை நினைவுபடுத்தி, தேவனுடைய வேலையை செய்ய வைத்தது போல், நாமும் நம் பிள்ளைகளை, பேரப்பிள்ளைகளை, உறவினர்களை மற்றும் சபையாரை நினைவுபடுத்தி, கர்த்தருக்காக செயல்பட தூண்ட வேண்டும்.

ஆம் கிறிஸ்தவரே, இயேசு கிறிஸ்துவை அறியாத அநேகர் பெருகும்போது, நமது அடுத்த தலைமுறையான பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் வாழும்படி பாதுகாப்பான, பரிசுத்தமான வழியை உலகில் விட்டுச்செல்வோம் என்ற உறுதி உண்டா?

சத்துருவானவன், கிறிஸ்து பிறக்கக்கூடாதபடியும், மனுக்குலம் இரட்சிக்கபடாதபடியும் கொண்டு வந்த சதியை முறியடிக்க (ஏனெனில் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறதாயிருக்கிறது), மற்றும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் பங்கெடுக்க எஸ்தர் தனது மௌனத்தை கலைத்து பேசவேண்டியிருந்தது.

இன்று மனுக்குலம் பாவத்திலே மாண்டு அழிந்துக்கொண்டிருக்கின்ற வேளையில் நீங்கள் மௌனமாயிருந்தால், தேவனுடைய இரட்சிப்பின் வேலையில் பங்கெடுக்காத துரோகிகளாகவும், நன்றியில்லாதவர்களாயும் இருப்போம் என்பதே நிதர்சனமான உண்மை. கிறிஸ்துவை தேவனுடைய தெய்வீக குமாரன் என்று அறிக்கையிடுவது பாக்கியம்! நான் சொல்லாவிட்டால் என்ன, வேறு யாராவது சொல்வார்கள் என்றோ, அல்லது போதகர் சொல்வார் என்றோ நீங்கள் சிந்திப்பதாக இருந்தால், உங்களைவிட துர்பாக்கியசாலி யாரும் இருக்கபோவதில்லை.

## 2. குஷ்டரோகிகள்

**2 ராஜா 7:8–9** "அந்தக் குஷ்டரோகிகள் பாளையத்தின் முன்னணிமட்டும் வந்தபோது, ஒரு கூடாரத்திற்குள் பிரவேசித்து புசித்துக் குடித்து, அதிலிருந்து வெள்ளியையும் பொன்னையும் வஸ்திரங்களையும் எடுத்துக் கொண்டு போய் ஒளித்துவைத்து, திரும்பிவந்து, வேறொரு கூடாரத்திற்குள் பிரவேசித்து, அதிலிருந்தும் அப்படியே எடுத்துக் கொண்டு போய் ஒளித்து வைத்து, பின்பு அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி : நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள் ; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும் ; இப்போதும் நாம்

போய் ராஜாவின் அரமனையாருக்கு இதை அறிவிப்போம் வாருங்கள் என்றார்கள்."

சீரியர்கள் இஸ்ரவேலை முற்றுகையிட்டபோது,



தாயே தான் பெற்ற பிள்ளையை சமைத்து சாப்பிடும் மிகவும் கொடிய நிலை (2 ராஜா 6) சமாரியாவிலே ஏற்பட்டது. அப்பொழுது தேவன், அற்புதமாக யுத்தமின்றி வெறும் சத்தத்தினாலே சீரியர்களை புறமுதுகிட்டு ஓடச்செய்தார். ஆயினும் இதை இஸ்ரவேலர்கள் அறியாதிருந்த சூழலில், அப்பட்டண வாசலில் இருந்த நான்கு குஷ்டரோகிகள் சீரியர் ஓடிப்போனதை கண்டு, அங்கிருந்த ஏராளமான உணவு தானியங்கள் மற்றும் பொன், வெள்ளி, வஸ்திரங்களை கண்டு பிரமித்து, தேவன் அளித்த இந்த அற்புத இரட்சிப்பை அரசருக்கு அறிவித்து, இவ்விதமாக நற்செய்தி சொல்லி இஸ்ரவேலர்கள் காப்பாற்றப்பட உதவினார்கள்.

சர்வவல்ல தேவன், தாம் அருளிய இரட்சிப்பை அறிவிக்க பயன்படுத்திய நபர்களை பாருங்கள். அவர்கள் சொந்த மக்களால் உதாசினப்படுத்தப்பட்டு, ஊருக்கு வெளியே பிச்சை எடுத்து பிழைக்கும்படி விரட்டிவிடப்பட்டவர்கள். ஏனெனில் நற்செய்தியை சொல்ல அவர்கள் இருதயம் ஆயத்தமாக இருந்தது. நாம் 'எனக்கு ஞானம் இல்லை', 'எனக்கு சரியாக சொல்லத்தெரியாது', 'நான் சொன்னால் யாரும் கேட்க மாட்டார்கள்' மற்றும் 'என்னை கேலி செய்வார்கள்' என ஏதாவது காரணங்களை சொல்லிக்கொண்டு, கர்த்தரை அறிவிக்காத நபராக நாம் இருக்கின்றோமா? அப்படியானால் நாம் நிச்சயமாகவே சாத்தானின் கண்ணியில் (சதியில்) விழுந்துவிட்டோம்.

**1 கொரி 1:21** "எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று". பைத்தியமாக தோன்றுகிற பிரசங்கத்தினாலே ஆத்துமாக்களை இரட்சிக்க தேவன் திட்டம் வைத்திருக்கிறபோது, அவருடைய சித்தத்திற்கும், சத்தத்திற்கும் கீழ்படியாமல் இருப்பது என்பது பிசாசுக்கு கீழ்படிந்து தேவனுக்கு எதிர்த்து நிற்பதாக இருக்கிறது.

மனிதனுடைய தேர்ந்தெடுத்தலுக்கும், தேவனுடைய தேர்ந்தெடுத்தலுக்கும் உள்ள மிகப்பெரிய வித்தியாசத்தை, அவர் தாவீது தேர்ந்தெடுக்கப்பட்டதிலே வெளிப்படுத்தினார் **(1 சாமுவேல் 16).** அதை புதிய ஏற்பாட்டிலே கொரிந்தியருக்கு சொல்லி மீண்டும் உறுதிப்படுத்துகிறார் **(1 கொரி 1:26–29).**

ஆத்துமாக்களை இரட்சிக்க யாருடைய ஞானமும், புத்திசாலித்தனமும், பராக்கிரமும், பலமும் தேவனுக்கு தேவையில்லை. ஆத்துமாக்களை இரட்சிக்க அவருடைய வசனம் மட்டுமே போதுமானதாகவும், வல்லமை உள்ளதாகவும் இருக்கிறது. ஆகையால் நாம், நம் இருதயத்தை எஸ்றாவை போல பக்குவப்படுத்துவோம். **எஸ்றா 7:10** "கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதன்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்".

### 3. எரேமியா

**எரேமியா 20:9** "ஆதலால் நான் அவரைப் பிரஸ்தாபம் பண்ணாமலும் இனிக் கர்த்தருடைய நாமத்திலே பேசாமலும் இருப்பேன் என்றேன் ; ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல் என் இருதயத்தில் இருந்தது ; அதைச் சகித்து இளைத்துப்போனேன்; எனக்குப் பொறுக்கக் கூடாமற்போயிற்று".

எரேமியா இஸ்ரவேலருக்கு தேவனுடைய எச்சரிப்பின் சத்தத்தை சொல்லிக்கொண்டே இருந்தார். ஆயினும் இஸ்ரவேலர்கள் அதை காது கொடுத்து கேட்கவும் விரும்பவில்லை. அந்த செய்தியை கொண்டு வந்த எரேமியாவையும் மிகவும் உபத்திரவப்படுத்தினர் மற்றும் அவமானப்படுத்தினர். அந்த சூழ்நிலையில், விரக்தியில் எரேமியா, இனிமேல் கர்த்தருடைய வசனத்தை இனி சொல்லமாட்டேன் என முடிவெடுக்கிறார். ஆயினும் அவருடைய முடிவு தவிடுபொடியாகியது. ஏனெனில் அவர் பெற்றுக்கொண்ட கர்த்தருடைய வசனம் அவருடைய வாயை மூடவிடாமல் திறக்கச்செய்தது.

அன்பானவர்களே, நீங்கள் வசனத்தைக் கற்றுக்கொண்டு அதை மற்றவருக்கு அறிவிக்காமல் இருக்கிறீர்களா ? நீங்கள் அப்படி அறிவிக்காமல் இருப்பதற்கு எரேமியாவைப்போல உங்களுக்கும் நியாயமான காரணங்கள் இருக்கலாம், அல்லது எரேமியாவிற்கு ஏற்பட்ட கசப்பான அனுபவத்தை நீங்களும் பெற்றிருக்கலாம்.



எரேமியாவின் தவறான முடிவை தவிடுபொடியாக்கிய கர்த்தருடைய வசனம், உங்களது தவறான முடிவையும் மாற்றும் வல்லமை உள்ளது என்பது உண்மையானால் **(எபி 4:12)**, உங்கள் வாயை திறவுங்கள். ஏதாவது காரணங்களைச் சொல்லி, உங்கள் வாயை, கர்த்தரை அறிவியாதபடி மூடவைக்கவேண்டும் என்பதே சாத்தானின் இருதயத்தின் ஏக்கமாயிருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

எசேக்கியேலுக்கு சொல்லப்பட்ட கர்த்தருடைய வார்த்தையை மறந்துவிட வேண்டாம். "அவர் என்னை நோக்கி : மனுபுத்திரனே, எனக்கு விரோதமாய் எழும்பின கலகக்கார ஜாதியாகிய இஸ்ரவேல் புத்திரரிடத்திற்கு நான் உன்னை அனுப்புகிறேன் ; அவர்களும் அவர்கள் பிதாக்களும் இந்நாள்வரைக்கும் எனக்கு விரோதமாய்த் துரோகஞ் செய்தார்கள். அவர்கள் கடினமுகமும் முரட்டாட்ட இருதயமுள்ள புத்திரர்; அவர்களிடத்திற்கு நான் உன்னை அனுப்புகின்றேன்; கர்த்தராகிய ஆண்டவர் இன்னின்னதை உரைக்கிறார் என்று அவர்களோடே சொல்லு. கலகவீட்டாராகிய அவர்கள் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி, தங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசி உண்டென்கிறதை அவர்கள் அறியவேண்டும்". **(எசே 2:3−5).**

தீமோத்தேயுவிற்கு சொல்லபட்ட ஆவியானவரின் கட்டளை என்பது இரட்சிக்கப்பட்ட எவரொருவரும் தவிர்த்திடாமல், தீவிரித்து கட்டாயம் செய்ய வேண்டியதாகவே இருக்கிறது. **2 தீமோ 4:2** "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு".

## 4. பவுல்

**அப் 18:9−10** "இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி : நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே ; நான் உன்னுடனே கூட இருக்கிறேன், உனக்குத் தீங்கு செய்யும் படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார்".

காண்பவர் எல்லாரிடமும் கர்த்தரை அறிவித்த பவுல், கொரிந்தியருக்கு நற்செய்தி அறிவிக்க வந்த போது, பயத்தினால் அதை அறிவியாமல் மௌனமானார். **1 கொரி 2:3** "அல்லாமலும் நான் பலவீனத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன்".

ஆனால் கர்த்தர், அவரை நோக்கி : 'மௌனமாயிராதே, நான் உன்னுடன் இருக்கிறேன், இந்த பட்டணத்தில் சத்தியத்தை நேசிக்கிற, அதற்கு கீழ்படிகிற ஜனங்கள் உண்டு' என்று தைரியப்படுத்தி ஊக்கப்படுத்தியபோது, ஒருநாள் அங்கிருக்க பயந்த பவுல், ஒன்றரை ஆண்டுகள் (18 மாதங்கள்) அங்கே இருந்து சத்தியத்தை அறிவித்தார் **(அப் 18 : 11).**



ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தம் "நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் ; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்." **(மத்தேயு 28 : 19−20)** என்பதாக உள்ளது. ஆகையால், நாம் தைரியத்துடனே கிறிஸ்துவை அறிவிப்போம். பவுலை போல நாமும் சுவிசேஷம் அறிவிக்க முடியாத, தடைசெய்யபட்ட சூழலில் தள்ளப்பட்டாலும், நம்மை நாமே கர்த்தருக்குள் திடப்படுத்திக்கொண்டு அவரை அறிவிப்போம். பவுல் கிறிஸ்துவிற்காக சிறை செல்வதற்கு மாத்திரமல்ல, மரிக்கவும் ஆயுத்தமாயிருக்கிறேன் என விசுவாச அறிக்கை செய்தார் **(அப் 21 : 13)** என்பதை நினைவில்கொள்வோம்.

## இறுதியாக....

அன்பானவர்களே ! மௌனமாக இருப்பதை விட ஊமையாக இருப்பது நலம் என்ற சிந்தையை நம் மனதில் ஆழத்தில் பதிய வைப்போம். கிறிஸ்துவை மறுதலிக்கிற கூட்டத்தையும், கிறிஸ்துவை அறிக்கை செய்ய தடை செய்கிற கூட்டத்தையும் பிசாசானவன் அதிகரிக்க செய்கின்ற வேளையில், நாம் எவ்வளவு ஜாக்கிரதையுடனும், வினயத்துடனும் கர்த்தரை அறிக்கை செய்ய வேண்டும் என்பதை சற்றே யோசித்து பாருங்கள். எலிசா, கேயாசிடம் வைத்த அறைகூவலை கவனித்து பாருங்கள். பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்புகளையும் திராட்சத்தோட்டங்களையும் ஆடு மாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக் காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா ? **(2 ராஜா 5 : 26).**

ஏசாயாவிற்கு தேவன் கொடுத்த கட்டளையை நாம் மறக்க வேண்டாம். **ஏசா 58 : 1** சத்தமிட்டுக் கூப்பிடு ; அடக்கிக் கொள்ளாதே ; எக்காளத்தைப்போல உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி.

சாத்தான் தனது வாயை விரிவாக ஆவென திறந்திருக்கிறான்; கிறிஸ்துவை தூற்றவும், மறுதலிக்கவும், மறக்க செய்யவும் அப்படிச் செய்கிறான். நீங்கள் உங்கள் உதடுகளை கிறிஸ்துவை அறிக்கை செய்யாமல் மூடும் போது, சாத்தானின் வேலையை சுலபமாக்குகிறீர்கள் மற்றும் அவர்களுக்கான பரலோக கதவை அடைத்து, நரகத்தின் வாசலை திறக்கிறீர்கள். என்ன ஒரு கொடுமை ! அன்பானவர்களே, இனி காலம் சொல்லாது, நாட்களை பிரயோஜனப்படுத்துவோம். ஆகையால் தினமும் கிறிஸ்துவின் நாமத்தை அறிக்கை செய்து, பிதாவாகிய தேவனை மகிமைப்படுத்துங்கள். எல்லாம் வல்ல ஆவியானவர் தாமே, உங்களுக்கு பெலத்தை கட்டளையிடுவாராக. ஆமென்.

## பாடம் : 1 வேதாகம உடன்படிக்கைகள்

Jerry Bates



இந்தக் கல்வி மிகவும் முக்கியமானது; இருப்பினும் பெரும்பாலும் மறக்கப்பட்ட ஒரு பாடமாக இது இருக்கிறது. உடன்படிக்கைகளைக் குறித்த தவறான புரிந்து கொள்ளுதல்தான் வித்தியாசப்பட்ட விசுவாசங்களை கிறிஸ்தவ கூட்டங்களுக்குள் ஒரு பரவலான ஆடையைப்போல் சூழ்ந்து கொண்டிருக்கும் பெரிய காரணங்களில் ஒன்றாகும். வேதாகமம் முழுவதுமே தேவனுடைய வசனமாகையால், நாம் அவை எல்லாவற்றுக்கும் கீழ்படிய வேண்டும் என்பதை மிக எளிமையாக யூகித்துக் கொள்ளலாம். உண்மையில், எந்த ஒருவரும் அவை முழுவதுக்கும் கீழ்படிய முயற்ச்சிப்பதில்லை. பழைய ஏற்பாடு தொழுகையின் போது பலதரப்பட்ட பிராணிகளை பலி செலுத்தும் படி கட்டளை கொடுத்தது; ஆனால் தேவனுக்கு செய்யும் தொழுகையில் இன்று வரை யாரும் மிருகபலியை தொடர்ந்து செலுத்துவதாக நான் காணவில்லை, ஆகையால், ஒரு கிரமமான வரிசையில் பெரிதும் தேவைப்படுகிற, வேதாகாம உடன்படிக்கைகளைக் குறித்த படிப்பைத் தொடருவோமாக.

### உடன் படிக்கை என்றால் என்ன ?

இந்த கல்வியில் உடன்படிக்கை என்றால் என்ன என்று சரியாகத் தீர்மானிப்பது முதல் படியாகும். இதை எளிமையாகச் சொன்னால், உடன்படித்கை என்றால் ஒரு ஒப்பந்தம் என்று பொருள். இருவருக்கு இடையே ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு ஒப்பந்தம். இதில், இருவரும் பலவகையினும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு பொறுப்பாளிகளாக இருக்கிறார்கள். பழங்காலத்தில், இரண்டு வகையான உடன்படிக்கைகள் இருந்தன. ஒருவகை உடன்படிக்கை, சமமான இரண்டு தனி நபர்களுக்கு இடையே ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தம். அவர்கள் கூடி கலந்து பேசி, இருவரும் அந்த ஒப்பந்தத்துக்கு கட்டுப்படும் முடிவுக்கு வரும் வரை ஒத்து போகிற சூழலை ஏற்படுத்திக் கொள்வார்கள்; அது இருநாடுகளுக்கு இடையே இன்று ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தத்தைப் போன்றது. உடன்படிக்கையில் மற்றொரு வகை, ஒரு மேலான நபர் தன்னைக் காட்டிலும் கீழான நபரிடத்தில், ஒரு வெற்றி கொண்ட நாடு மற்றொரு நாட்டுடன் ஏற்படுத்திக் கொள்ளும் வகையாகும். மேலான நபரின் சில கோரிக்கைகளோடு கூட சில வாக்குறுதிகளோடும் ஒப்பந்தம் நிறைவேறும் கீழான நபர் அவைகளுக்குக் கீழ்படிய வேண்டும். இல்லாவிட்டால் விளைவை சந்திக்க வேண்டியிருக்கும். இதற்கு ஒத்த உடன்படிக்கைகளைதான் தேவன் மனிதனுடன் ஏற்படுத்தினார். தேவன் நம்முடைய சிருஷ்டிகராக இருக்கிறபடியால், மனுஷன் அவரோடு பேரம் பேசி தனது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள இயலாது.

இந்த உடன்படிக்கைகள் வழக்கமாக சம்மந்தப்பட்ட நபர்களுடைய ஆணையிடுதல் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் ஏற்படுத்தப்படும். ஏதோ ஒரு வகையில் அது உறுதி படுத்தப்படுவதற்கு சில நினைவுச்சின்னத்தை ஏற்படுத்தியோ அல்லது பரிசுகளை பரிமாறியோ ஏற்படுத்துவார்கள். உடன்படிக்கைகளின் முக்கியதுவத்தை இது காட்டுகிறது. ஒருமுறை உடன்படிக்கைகளை ஏற்படுத்தி விட்டால், மிக வினயமான விளைவுகள் ஏற்படுத்தப் பட்டாலொழிய வேறு எக்காரணம் கொண்டும் மீறப்படக்கூடாது. **கலாத்தியர் 3:15ல்** பவுல், "சகோதரரே, மனுஷர் முறைமையின்படி சொல்லுகிறேன் ; மனுஷர்களுக்குள்ளே உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை ஒருவனும் தள்ளுகிறதுமில்லை, அதினோடே ஒன்றையும் கூட்டுகிறதுமில்லை. மனுஷர்களுக்குள்ளே செய்யப்பட்ட உடன்படிக்கை அவர்களைக் கட்டுபடுத்தக்கூடியதாயிருக்குமானால், தேவனோடு ஏற்படுத்திக் கொள்ளும் உடன் படிக்கைக்கு இன்னும் எவ்வளவு அதிகமாய் கட்டுபடுத்தக்கூடும். உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டவர்களை மட்டுமே அவைகள் கட்டுப்படுத்தும் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கவனிக்கவும்.

நான் A என்பவருடன் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தவேனானால், பிறகு அந்த ஒப்பந்தம் அவருக்கும் எனக்கும் இடையே மட்டுமே கட்டுப்படுத்தும். அது B என்ற நபரையோ மற்ற எவரையுமோ கட்டுப்படுத்தாது. இதே கொள்கைதான் வேதகாமம் சார்ந்த உடன்படிக்கைகளுக்கும் பொருந்தும். இது தொடர்ந்து வரும் பாடங்களில் நினைவில் கொள்வதற்கு ஒரு விசேஷித்த முக்கியத்துவமுள்ள கருத்தாகும்.

### தேவன் ஏற்படுத்தின பலதரப்பட்ட உடன்படிக்கைகள்

ஏற்கனவே நாம் சொன்னபடி, தேவன் பல்வேறு மனுஷர்களிடத்தில் பல்வேறு காலங்களில் வித்தியாசப்பட்ட உடன்படிக்கைகளை ஏற்படுத்தினார். முதல் உடன்படிக்கையை அவர் ஆதாமிடத்தில் பண்ணினார். தேவன் ஒரு தோட்டத்தை சிருஷ்டித்து ஆதாமையும் ஏவாளையும் அதிலே கொண்டுபோய் வைத்தார். தேவன் அவர்களுக்கு எல்லாவற்றையும்

கொடுத்தார். உண்மையில் அது பூமியிலே ஒரு பரதீசாக இருந்தது. தேவன் அவர்களிடத்தில், ஒரே ஒரு நிபந்தனையைத் தவிர, மற்றபடி அவர்கள் மரணமற்ற (நித்திய) வாழ்க்கையை வாழ்வார்கள் என்று வாக்குத்தத்தம் பண்ணினார். அவர்கள் நன்மை தீமை அறியத்தக்க கனியை புசிக்கக்கூடாது என தடைவிதிக்கப்பட்டவர்களாயிருந்தார்கள். ஆதாமும் ஏவாளும் விலக்கப்பட்ட கனியைப் புசித்தார்கள், உடன்படிக்கையை மீறினார்கள், ஆதலால் அந்தப் பாவத்தினிமித்தம் தோட்டத்திலிருந்து வெளியேற்றப் பட்டார்கள்.

நாம் வாசிக்கிற இரண்டாவது உடன்படிக்கை நோவாவுடனானது. தேவன், இனி உலகத்தை ஒரு போதும் ஜலப்பிரளயத்தால் அழிப்பதில்லை என்ற உடன்படிக்கையை செய்தார். தேவனுக்கும் மனுஷருக்குமிடையே அந்த உடன்படிக்கையின் அடையாளமாக வைத்துதான், வானவில் (ஆதியாகமம் 9:9–17). இந்த உடன்படிக்கையில் நோவாவும் பலுகிப் பெருகி, மனுஷரும், ஜீவ ஜந்துகளும் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்று கட்டளையும் உட்பட்டது (ஆதியாகமம் 8 : 17)

தாவீதுடன் மற்றொரு உடன்படிக்கையைச் தேவன் செய்தார். 2 சாமுவேல் 7ல் தாவீதுடன் தேவன் செய்த வாக்குத்தத்தம் வருமாறு. "உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது, நான் உனக்குப் பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை ஏழும்பப் பண்ணுவேன். உன் வீடும், உன் ராஜ்யமும் என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலை பெற்றிருக்கும் என்கிறார் என்று சொல்லச் சொன்னார். (2 சாமுவேல் 7: 12, 16) இந்த வாக்குத்தத்தை தாவீது 2 சாமுவேல் 23 : 5 ல் உடன்படிக்கை என்பதாகச் சொல்லுகிறார். இந்த உடன் படிக்கை மீண்டும் சங்கீதம் 132:12 ல் குறிப்பிடப்படுகிறது. "உன் குமாரர் என் உடன் படிக்கையையும், நான் போதிக்கும் என் சாட்சிகளையும் காத்து நடந்தால், அவர்கள் குமாரரும் என்றென்றைக்கும் உன் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள் என்றும், கர்த்தர் தாவீதுக்கு உண்மையாய் ஆணையிட்டார் ; அவர் தவற மாட்டார்." தேவன் வாக்குத்தத்தம் பண்ணி, தாவீதின் சந்ததி அவருடைய சிங்காசனத்தின் மேல் என்றென்றைக்கும் வீற்றிருப்பார் என்று சொன்னார்.

தொடர்ச்சி 13ம் பக்கத்தில்...


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : *92 4421 4421 & 92 4431 4431*) ***Nambikai TV : Every Friday 6.00 - 6.30 a.m.***

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# தொடர் 20 எரேமியா மற்றும் புலம்பல் : அழுகின்ற தீர்க்கதரிசி

வாசிக்க வேண்டிய அதிகாரங்கள் : **1, 3, 6, 7, 8, 9, 20, 23, 25, 26, 28, 29, 31, 32, 36-44, 52; புலம்பல் 1.**

## தலைப்பு

எரேமியாவின் புத்தகம் அதன் எழுத்தாளரைக் கொண்டு பெயரிடப்பட்டுள்ளது **(எரேமியா 1:1)**. இந்தப் பெயரானது “யெகோவா நிலைநாட்டுகிறார்” மற்றும் “யொகோவா நியமிக்கிறார்” என்பது உட்படப் பல்வேறு விஷயங்களை அர்த்தப்படுத்தக்கூடும்.

“புலம்பல்” என்பது “அழுதல்” என்று அர்த்தப்படுகிறது. இவ்வார்த்தையின் உணர்வைப்பெறுவதற்கு, நாம் திருப்பப்பட இயலாத இழப்பு ஒன்றை அடைந்த ஒருவர், கட்டுபடுத்த இயலாதபடிக்கு அழுவதை நினைத்துப் பார்க்க வேண்டும். இங்கு கவனிப்பின் கீழ் உள்ள “புலம்புதல்” எருசலேம் நகரத்தின் அழிவைப் பற்றியதாக உள்ளது **(புலம்பல் 1:1; 5:22)**.

## பின்னணி

ஏசாயாவைப் போன்றே எரெமியாவும், தெற்கு ராஜ்யமாகிய யூதாவில் அந்நிய வல்லமையொன்று எருசலேமை அழிக்கப்போவதாக அச்சுறுத்திக் கொண்டிருக்கையில் ஊழியம் செய்தார். ஏசாயாவை போலின்றி, எரெமியாவால் அழிவையோ அல்லது அதைத்தொடர்ந்து மக்களை சிறையிருப்புக்கு இழுத்துச்செல்வதையோ தவிர்க்க இயலாதிருந்தது. எரெமியாவின் நாட்களில், மக்களின் இருதயங்கள் கடினப்பட்டிருந்தன; தேவனுடைய பொறுமை எல்லை கடந்திருந்தது/மீறிப்போயிருந்தது.

எரேமியா ஒரு நீண்ட ஊழியத்தைக் கொண்டிருந்தார், இவர் ஐந்து அரசர்களின் காலத்தில் ஊழியம் செய்திருந்தார். இவரது ஊழியம் சீர்திருத்தத்தின் காலமாகிய யோசியாவின் நாட்களில் தொடங்கியது; இருப்பினும் சீர்திருத்தம் அதிகநாட்கள் நீடிக்கவில்லை. எரேமியாவின் முயற்சிகள் இருந்தபோதிலும், ராஜ்யம் விரைவிலேயே சீரழியத் தொடங்கிற்று. பாபிலோனிய சிறையிருப்பு எழுபது ஆண்டுகள் நீடித்திருக்கும் என்பது எரேமியாவின் தீர்க்கதரிசனங்களில் கவனிக்கத்தக்க ஒன்றாகும் (25:11; 29:10). (குறிப்பு : இந்த எழுபது ஆண்டுகள் என்பவை கி.மு. 596ல் எருசலேம் அழிக்கப்பட்ட போதல்ல, ஆனால் கி.மு. 605ல் மக்கள் முதன்முறையாக சிறையிருப்பில் பிடிக்கப்பட்டுச் சென்றபோது தொடங்கிற்று என்பதைக் கவனியுங்கள்.)

அழிவு தவிர்க்க இயலாததாக இருந்ததென்று எரேமியா தெளிவாகக் கண்டபோது, அவர் தலைவர்களை, பாபிலோனியரிடம் சரணடைந்து தங்களுக்குத் தகுதியான தண்டனையை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தினார். இவ்விதமாக, எருசலேம் தப்பிக்க முடிந்திருந்தது. இப்படிப்பட்ட செய்தியை உரைத்ததால் எரேமியா காட்டிக்கொடுப்பவர் என்று முத்திரை குத்தப்பட்டார்.

பழைய ஏற்பாட்டில் வேறு எவரைக்காட்டிலும் எரேமியாவைப் பற்றி அதிகம் தனிமனித வரலாற்றுக் குறிப்புகள் தரப்பட்டுள்ளன. இதில் தாவீதின் வரலாறும் உள்ளடங்குகிறது; இருப்பினும், எரேமியாவைக் குறித்து நம்மில் பெரும்பான்மையானவர்கள் ஒரு சிறிதளவே அறிந்திருக்கின்றோம். அவரது எழுத்துக்கள் நாள்வரிசையில் அமைக்கப்பட்டிருப்பதில்லை என்பதால், அவைகள் வாசிப்பதற்குக் கடினமாக உள்ளன. சாத்தியக்கூறுள்ள உதவியாக, பின்வரும் வரைகுறிப்புகள் நாள்வரிசை முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

யூதப் பாரம்பரியமானது, புலம்பலின் புத்தகம் எரேமியாவினால் எழுதப்பட்டது என்று கூறுகிறது; இந்தக்கூற்றுடன் இப்புத்தகத்தில் இருக்கும் உள்ளான ஆதாரங்கள் ஒத்துப்போகின்றன. செப்துவஜிந்த் வேதாகமத்தில், எரெமியாவின் தீர்க்கதரிசனமும் புலம்பலும் ஒரே புத்தகமாக உள்ளது.

## வரைகுறிப்பு – எரேமியா

I. யோசியாவின் ஆட்சிக்காலத்தின்போது (1-12).

II. தீர்மானிக்க இயலாத ஒரு காலத்தில் : அடையாளங்களில் தீர்க்கதரி சனங்கள் (13 20).

III. யோசவகாஸ் அரசரின் ஆட்சியின்போது ஆட்சி (இந்தக் காலகட்டத்திற்கென்று சிறப்பான நிகழ்ச்சி எதுவும் இல்லை).

IV. யோயாக்கீமின் ஆட்சியின்போது.

அ. ஆட்சியின் தொடக்கம் - எரெமியா விசாரிக்கப்படுதல்(26).

ஆ. ஆட்சியின் நான்காம் ஆண்டு - பாபிலோனியா நெருங்கிவருத (25).

இ. நான்காம் ஆண்டில் - அரசர் புத்தகச்சுருளை எரிக்கிறார் (36).

ஈ. நான்காம் ஆண்டில் - பின்தொடர் நிகழ்ச்சிகள் (45,46).

உ. ஆட்சியின்போது - ரேகாபியர்களின் உதாரணம் (35).

V. யோயாக்கீனின் ஆட்சியின்போது (இந்தக் காலகட்டத்திற்கென்று சிறப்பான நிகழ்ச்சி எதுவும் இல்லை; ஒருவேளை அடையாளத் தீர்க்கதரிசனங்களில் சில இந்தக் காலகட்டத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம்).

VI. சிதேக்கியாவின் ஆட்சியின்போது.

அ. சிதேக்கியாவினுடைய ஆட்சியின் தொடக்கம்; எரேமியாவின் நுகத்தடி, கடிதம், மற்றும் பாடல் (27-31).

ஆ. எருசலேமின் அழிவிற்கு ஏழு ஆண்டுகள் முன்பாக; பாபிலோனின் வீழ்ச்சி பற்றிய ஒரு குறிப்பு (50,51)

இ. முற்றுகையின் தொடக்கம் (21-24).

ஈ. சிதேக்கியாவின் பத்தாம் ஆண்டு ஆட்சி; சிறையில் எரேமியா (32-34).

உ. ஒன்பது முதல் பதினோறாம் ஆண்டு வரை: முற்றுகை மற்றும் எருசலேம் தீக்கிரையாகுதல் (37 -39).

VII. சிறையிருப்பின்போது (40-44).

VIII. தீர்மானிக்க இயலாத ஒரு காலத்தில்: நாடுகளுக்கு எதிரான தீர்க்கதரிசனங்கள் (47-49).

IX. கடைசி மறுகண்ணோட்டம் (52).

### வரைகுறிப்பு – புலம்பல்

I. துன்மார்க்கத்தின் வழி (1).

II. தேவனின் கோபம் (2).

III. வருத்தத்தின் பாரம் (3).

IV. உதவியின் தேவை (4).

V. அக்கிரமத்தின் சேதம் (5).

### எரேமியா மற்றும் புலம்பல் புத்தகங்களில் இருந்து பாடங்கள்

"உண்மையான மனிதர்கள்" அழுவார்களா ? நமது கர்த்தர் அழுதார் (லூக்கா 19:41: யோவான் 11:35) எரேமியா "அழும் தீர்க்கதரிசி" என்று அறியப்படுகின்றார் (எரேமியா 9:1), ஆனால் அவர் தமக்காக அழவில்லை. அவர் தமது மக்களின் இழந்துபோன நிலையைக்குறித்து அழுதார். அழுதல் என்பது ஒரு மனிதர் பலவீனமாய் இருக்கின்றார் என்று நிரூபிப்பதாகச் சிலர் நினைக்கின்றனர். ஆனால் எரேமியா பலவீனமாயிருக்கவில்லை. நமது ஊழியத்திற்கு ஒழியாத விளைவுகள் எதையும் காணாது நம்மில் எத்தனை பேர் நாற்பது ஆண்டுகள் வரையிலும் பொறுமையாய் இருக்க முடியும்? உண்மையான மனிதர்கள் கூருணர்வுடன் இருக்கின்றனர்; அவர்கள் அழ முடியும்.

நாம் கேட்பதால் மட்டும் அறிபவற்றைக் காட்டிலும் நாம் பார்ப்பதால் அறிபவற்றில் அதிகமானவற்றை நினைவில்வைக்கின்றோம். எரேமியாவின் புத்தகம், கெட்டுப்போன சணல் கச்சை (13), குயவனும் களிமண்ணும் (18), உடைந்த பானை (19), நுகத்தை அணிந்துகொள்ளுதல் (27,28), மற்றும் ஒரு செய்தியுடன் கல் ஒன்றைக் கட்டி அதை ஐப்பிராத்து நதியில் எறிதல் (51) போன்ற பாடங்களினால் நிறைந்துள்ளது. சிலவேளைகளில் நாம் என்ன கூறிக்கொண்டிருக்கிறோம் என்பதை மக்கள் காண்பதற்குக் காட்சி உதவிகள் தேவைப்படுகின்றன.

புதிய உடன்படிக்கை பற்றிய எரேமியாவின் கூற்று தனிச்சிறப்பு வாய்ந்ததாக உள்ளது (31:31-34). பழைய ஏற்பாடு (உடன்படிக்கை) மாற்றப்பட வேண்டியதான ஒரு தற்காலிக உடன்படிக்கையாய் இருந்தது. எபிரெயர் 8:6-13 வசனப்பகுதியில் எரேமியா 31 மேற்கோள் காண்பிக்கப்படுகிறது; இதில் முதல் உடன்படிக்கையானது இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டினால் (உடன்படிக்கையினால்) மாற்றப்பட்டது என்று குறிப்பிடப்படுகிறது.

எரேமியாவின் புத்தகத்தில் மேசியாவைப் பற்றிப் பல குறிப்புகள் உள்ளன. (இ.வ. எரேமியா 31:15ஐ மத்தேயு 2:16-18 உடன் ஒப்பிடவும்). விசேஷமாக, மேசியாவுக்கான சொற்றொடரான "கிளை" என்பது பற்றி எரேமியாவின் குறிப்புகளைக் கவனிக்கவும் (எரேமியா 23:5, 6; 33:14-18). மக்கள் இயேசுவைக் கண்டபோது, அவர்கள் எரேமியாவை நினைத்தனர் (மத்தேயு 16:14).

| பிப்ரவரி மாத சிறுவர் புதிர் எழுதியவர் |
|---|
| 1. R. சிட்டு தேவி – செங்கல்பட்டு |



# புத்தியுள்ள கன்னிகைகள்

அன்புள்ளவர்களே, ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இயேசு இந்த பூமியிலே வாழ்ந்த போது, ஜனங்களுக்குதான் சொல்ல வேண்டியதை, மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் உவமைகள் மூலமாக விளக்கினார். அதில் சிறப்பான ஒன்று, இயேசுவின் வருகைக்காக நாம் ஆய்த்தமாகி காத்திருக்க வேண்டும் என்பதை உணர்த்த, பத்து கன்னிகைகள் பற்றிய ஒரு உவமையை சொன்னார். இது மத்: 25:1-13ல் சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த உவமையின் சாராம்சம் என்னவென்றால் மணவாளனாகிய இயேசு வரும்போது நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும், காத்திருக்க வேண்டும், அவரின் வருகை எப்பொழுது வேண்டுமானாலும் இருக்கலாம் என்பதே! (மத்: 25:5).

## 10 கன்னிகைகள் :

பரலோக ராஜ்யம் என்பது, தீவட்டிகளை பிடித்துக் கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்ட பத்து கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கிறது. அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களும், ஐந்து பேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள். புத்தியில்லாதவர்கள் என்ன செய்தார்கள் என்றால், தீவட்டிகளை கொண்டுபோனார்கள், ஆனால் எண்ணெயையோ கூடக் கொண்டு போகவில்லை. புத்தியுள்ளவர்கள் என்ன செய்தார்கள் என்றால், தீவட்டிகளுடன் எண்ணெயையும் கொண்டு போனார்கள்.

மணவாளன் வரத் தாமதமானதால், எல்லாரும் தூங்கி விட்டார்கள். நடுராத்திரியில் மணவாளன் வருகிறார் என்றும், அவருக்கு எதிர் கொண்டு போகச் சொல்லியும் ஒரு சத்தம் உண்டாயிற்று. அவர்கள் எல்லாரும் தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். அப்பொழுது புத்தியில்லாதவர்களின் தீவட்டிகள் அணைந்துபோக ஆரம்பித்தது; அவர்கள் புத்தியுள்ள ஸ்திரிகளிடம் எண்ணெய் கேட்ட போது, இருவருக்கும் போதாது, எனவே நீங்கள் போய் விற்கிறவர்களிடத்தில் போய் வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள். அவர்கள் போய் வாங்கப்போனபோது மணவாளன் வந்துவிட்டார். ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூடக் போய்விட்டார்கள் (மத் :25: 6,7,8 ).

பிரியமானவர்களே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மீண்டும் வரப்போகிறார். அவர் வரபோகும் நாளையாவது, நாளிகையையாவது நாம் அறியாததினால் எப்பொழுது முழு ஆயத்தத்துடன் இருக்க வேண்டும். அதாவது புத்தியுள்ள கன்னிகைகளைப் போல கொஞ்சம் அதிகப்படியான (கூடுதலான) சிந்தனையோடே செயல்பட வேண்டும் ஆவிக்குரிய சிந்தனைகளில், செயல்களில் வளர்ந்தவர்களாயிருக்க வேண்டும். ஆண்டவரின் வருகை தாமதமாக இருக்கிறதென்று எண்ணி (2 பேதுரு 3:9) பரிசுத்தமற்ற வாழ்க்கை, ஆவிக்குரிய சிந்தனை இல்லாத வாழ்க்கை நாம் வாழ்ந்துக் கொண்டிருந்தால், அவர் நம்மை அழைத்து செல்ல வரும் வேளையில் அவரோடே நாம் பரமேறி செல்ல முடியாது. பெரிய பாக்கியத்தை, நித்திய வாழ்வை இழந்து விடுவோம்.

தினம் தினம் வேதம் வாசிப்பது, ஆவிக்குரிய விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது, சபை கூடிவருதலுக்கு எல்லாம் செல்வது, விசேஷமாக ஆண்டவரைப் பற்றி பிறருக்கு சொல்லுவது, ஆகிய இவைகளை தொடர்ந்து செய்ய வேண்டும். இதில் பெண்களாகிய நமக்கு அதிக பொறுப்பு இருக்கிறது. வீட்டிற்கு தேவையான, குடும்பத்திற்கு தேவையான, உலகத்துக்குரிய காரியங்களை சரியாக செய்யும் நாம், வேதாகமத்து காரியங்களை நம் குடும்பத்தார் தெரிந்து கொள்ள, அதிக முயற்சிகள் எடுத்து செயல்படுத்த வேண்டும். புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டை கட்டுகிறாள்... (நீதி 14:1 ).

– பெவர்லி கிங்ஸ்லி

## சிறுவர்க்கான கேள்விகள்

1. குஷ்டரோகிகள் தங்களுக்குள்ளே நியாயமல்ல என சொன்னது என்ன?
2. அவர்கள் நற்செய்தி சொன்னதினால் என்ன நடந்தது?
3. நான் சின்ன பிள்ளை என்றது யார்?
4. அவரிடம் தேவன் என்ன சொன்னார்?
5. பவுலை, ஜனங்கள் என்ன செய்தார்கள்?
6. பட்டணத்திற்குள் சென்று மீண்டும் பவுல் செய்தது என்ன?
7. இந்த மாதம் சிறுவர் பகுதி மூலம் நீங்கள், கட்டாயம் செய்ய வேண்டியதாக உணர்ந்தது என்ன?

பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-05-2017



கொடுத்தால் சாப்பிடுவோம். இல்லை என்றால் மரித்துபோவோம்' என்று சொல்லி இருட்டோடே எழுந்து போகிறார்கள்.

இந்த நான்குபேரும் நடந்து சீரியர்களிடம் செல்லும் முன்பே, தேவன் மிகப்பெரிய இரைச்சல் சத்தத்தினால் அவர்களை பயமுறுத்தி துரத்தியிருந்தார். ஆகையால் சீரியர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உயிர் பிழைத்தால் போதுமென்று ஓடிவிட்டனர். இந்த நான்கு குஷ்டரோகிகள் சீரியருடைய கூடாரத்தைப்போய் பார்த்தார்கள்; அங்கு எதிரி இல்லை. ஆனால் உணவு, உடை, பொன், வெள்ளி, உடைகள் என இவைகள் எல்லாம் மிகவும் ஏராளமாக இருந்தது. முதலில் நான்குபேரும் சாப்பிடுகிறார்கள், கொஞ்சத்தை எடுத்து ஒழித்து வைக்கிறார்கள். இப்படியே செய்யும் போது நான்குபேரும் தங்களுக்குள்ளே ஒருவரையொருவர் நோக்கி : 'நாம் செய்கிறது நியாயம் அல்ல; ஊருக்குள் நம் ஜனம் பசியினால் மரிக்கிறார்கள். இதைப் போய் சொல்லவில்லை என்றால் குற்றம் நம் மேல் சுமரும். ஆகையால் அரசருக்கும் மக்களுக்கும் அதை அறிவிப்போம்' என்று சொல்லிக்கொண்டு, உடனே சமாரியாவிற்கு சென்று அரசனிடம் சொல்லுகிறார்கள். மக்கள் எல்லாரும் வந்து சாப்பிட்டு திருப்தியடைந்தார்கள். ஆகையால் உயிர் பிழைத்தார்கள். குஷ்டரோகிகள் சொன்னதினாலே தேவன் கொடுத்த அற்புதமாக இரட்சிப்பையும் அதன் பெலனையும் அனுபவித்தார்கள்.

கடவுளின் செல்லப்பிள்ளைகளே ! ஒவ்வொரு மாதமும் பைபிள் சம்பவங்களை, இந்த பத்திரிக்கை மூலம் நீங்கள் மாத்திரம் படித்து, இயேசுவைப்பற்றி தெரிந்து கொள்கிறீர்கள். நிறைய மனப்பாடவசனம் படிக்கிறீர்கள். ரொம்ப சந்தோஷம்! ஆனால் இதை உங்கள் நண்பர்கள், பக்கத்து வீட்டில் உள்ளவர்கள், நீங்கள் பார்கிறவர்கள் என்று எல்லோருக்கும் வசனத்தை சொல்ல வேண்டும். அவர்களெல்லாம் தேவனுடைய இரட்சிப்பை பெறாமல், வசனம் இல்லாமல் கெட்டுப்போகிறார்களே ! அந்த நான்கு குஷ்டரோகிகள் ஊருக்குள் போய் சொன்னதினால் பஞ்சம் தீர்ந்தது, மரணத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார்கள். நீங்கள் இயேசுவைப்பற்றி சொன்னால் தான், அவர்கள் பாவத்திலிருந்தும், நரகத்தின் கொடுரத்திலிருந்தும் பாதுகாக்கப்படுவார்கள். நீங்கள் சொல்வீர்களா ? சொன்னால், கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனனவசனம் : 1 நாளாகமம் 16 : 23**

பூமியின் சகல குடிகளே! கர்த்தரைப் பாடி, நாளுக்குநாள் அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்.

- அன்பு ஏசுதாஸ்

பாடம் 3

# அப்போஸ்தலனாகிய பவுல்

ஹாய் குட்டீஸ் ! ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். முழு ஆண்டு தேர்வை நல்ல முறையில் எழுதியிருப்பீர்கள் என்று நம்புகிறேன். தேர்வு முடிவுகளுக்காக ஜெபிக்கிறோம். இந்த மாதம் அப்போஸ்தலனாகிய பவுலைப் பற்றி தெரிந்துக் கொள்ளலாம்.

பவுல் அப்போஸ்தலன் பல நாடுகளுக்கு பயணம் செய்து, ஆண்டவர் இயேசுவைப் பற்றி அறிவித்தார். அவர் ஒருமுறை பர்னபாவுடன் சேர்ந்து, இக்கோனியா என்னும் பட்டணத்திற்கு நற்செய்தி அறிவிக்க சென்றார். அங்கே இருந்த ஜெப ஆலயத்தில் பவுல், ஆண்டவர் இயேசுவைப் பற்றி அவர்களுக்கு அறிவித்தார் . அதை ஒருகூட்ட மக்கள் விசுவாசித்தனர். விசுவாசிக்காத சில யூதர்களோ, மக்களை பவுலிற்கும் பர்னபாவிற்கும் விரோதமாக தூண்டிவிட்டார்கள்.

ஆகையால் பவுலும் பர்னபாவும் அந்த ஊரை விட்டு, லீஸ்திரா தெர்பை என்னும் பட்டணங்களில் வந்து சுவிஷேம் அறிவித்தார்கள். அதுமட்டுமில்லாமல் அந்த ஊரிலே பவுல் பிறவியிலேயே சப்பாணியாக இருந்த ஒருவனை, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தனாலே நடக்கவும் செய்தார். இதனால் அந்த ஊர் ஜனங்கள் பவுலிற்கும், பர்னாபாவிற்கும் மாலை, மரியாதை எல்லாம் கொடுத்து, அவர்களுக்கு பலியிடவும் துணிந்தார்கள்.

பவுல் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார், 'நாங்கள் மனுசர்கள் தான்! கடவுளில்லை. நீங்கள் அனைவருக்கும் விக்கிரகங்களை விட்டுவிட்டு வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் படைத்த பரலோக தேவனையே வழிபடுங்கள்' என்று பிரசங்கமும் செய்தார். அருகிலிருந்த ஊர்களிலிருந்து வந்த யூதர்கள் சிலர், ஜனங்களை தூண்டிவிட்டு பவுல் மேல் கல்லெறிய வைத்தனர். ஜனங்கள் கல்லெறிந்து, பவுல் செத்துபோய்விட்டார் என நினைத்து, அவனை இழுத்து ஊருக்கு வெளியே குப்பை போல தூக்கிப்போட்டனர்.

குட்டீஸ்! நம்மை யாராவது ஆண்டவரை அறிவித்ததற்காக இப்படி உபத்திரபடுத்தினால் நாம் என்ன செய்வோம் ? போதும் என சொல்லி ஆண்டவரை அறிவிப்பதை நிறுத்திவிடுவோம். அப்படித்தானே?. ஆனால் பவுல் என்ன செய்தார் தெரியுமா? அந்த காயங்களுடன் எழுந்து, மீண்டும் அந்த ஊருக்குள் சென்று, சீஷர்களை நோக்கி : நாம்



'இப்படி அநேக துன்பங்களின் வழியாக தான் பரலோகம் போகமுடியும் தைரியமாக இருங்கள்' என சொல்லிவிட்டு, மீண்டும் அருகிலிருந்த பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் சென்று சுவிசேஷத்தை அறிவித்தார்.

குட்டீஸ், ஆண்டவர் இயேசு நம்முடைய பாவங்களிற்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்தெழுந்தார் என்றும், சிலைகளை வணங்குவதைவிட்டு நம்மை படைத்தவரை வணங்க வேண்டும் என்றும் சொல்ல வேண்டும். இதை சொல்லவேண்டிய முழு பொறுப்பும் நம்முடையது. ஆகையால் பவுலைப் போல, என்ன துன்பம் வந்தாலும் நாம் நற்செய்தியை சொல்லனும். நீங்க சொல்வீங்கத்தானே ? அப்படிச் சொன்னால், ஆண்டவர் இயேசு உங்கள் அனைவரோடும் இருப்பார்.

**மனனவசனம்: மத்தேயு 28 : 19,20**

நீங்கள் புறப்பட்டுபோய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைகொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தயம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்

**- குயினி பிரதீப்**

## (வேதகாம உடன் படிக்கைகள்) 7ம் பக்கம் தொடர்ச்சி....

தேவன் ஆபிரகாமோடும் உடன் படிக்கை பண்ணினார். **ஆதியாகமம் 12 : 1–3ல்** நாம் இதை பிரதானமாய் காண்கிறோம். "கர்த்தர் ஆபிரகாமை நோக்கி : நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரை பெருமைப்படுத்துவேன் ; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னை சபிக்கிறவக்கிறவர்களை சபிப்பேன் ; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்."

ஆபிரகாமினிமித்தம் தேவன் செய்த இந்த உடன்படிக்கையில் நான்கு பிராதானமான வாக்குறுதிகள் காணப்படுகின்றன. 1. ஆபிரகாம் ஒரு பெரிய ஜாதிக்கு (தேசத்தாருக்கு) தகப்பனாவார்; 2. இந்தப் புதிய தேசத்தார் வாசம் பண்ண ஒரு நாடு உண்டாயிருக்கும்; 3. தேவன் அவரை (ஆபிரகாமை) ஆசீர்வதிப்பார்; 4. பூமியில் உள்ள வம்சங்களெல்லாம் ஆபிரகாம் மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். இந்த கடைசி வாக்குத்தத்தம், அதன் இயல்பிலே ஒரு ஆவிக்குரிய ஆசீர்வாதமாகும்; மற்ற 3 ஆசீர்வாதங்களும் மாம்ச ரீதியானது. இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதம் வரவிருந்த இயேசுவை குறிப்பிடுவதாக இருந்தது; அவர் வந்து முழு உலகத்துக்கும் ஆவிக்குரிய இரட்சிப்பைக் கொடுப்பார்; அது ஆபிரகாமின் குடும்பத்தாருக்கு மாத்திரமல்ல.

பின்னதாக, ஆபிரகாமின் சந்ததியார் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்டுவந்து, தேவனாலே சீனாய் மலை வரை வழிநடத்தப்பட்டு, அங்கே மோசேயோடும் இஸ்ரவேல் ஜனத்தோடும் தேவன் உடன்படிக்கையை ஏற்படுத்தினார். "மோசே தேவனிடத்திற்கு ஏறிப்போனான்; கர்த்தர் மலையிலிருந்து அவனைக் கூப்பிட்டு : நீ யாக்கோபு வம்சத்தாருக்குச் சொல்லவும், இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியது என்னவென்றால், நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களை கழுகளுடைய செட்டைகளின் மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக் கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்கு சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாயிருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார்" **(யாத்திரகாமம் 19 : 3–6).** இந்த உடன்படிக்கையில் தான் பத்துக்கட்டளைகள் உட்படுத்தப்பட்டது. "அங்கே அவன் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இரவும் பகலும் நாற்பது நாள் கர்த்தரோடே இருந்தான். அவன் பத்துக்கற்பனைகளாகிய உடன் படிக்கையின் வார்த்தைகளைப் பலகைகளில் எழுதினான்" **(யாத்திராகமம் 34 : 28).**

கடைசி உடன்படிக்கை அனைத்து மனுஷர்களிடத்திலும் ஏற்படுத்தப்பட்டது; இது சிலுவையிலே இயேசு மரித்தபோது ஏற்படுத்தப்பட்டது. இந்த கடைசி இரண்டு உடன்னடிக்கைகளும் நமது படிப்புக்கு, குறிப்பாக எடுத்துக்கொள்ளபட்டவை. இன்றைய உலகில் காணும் மார்க்க பிரிவினைகளுக்கு அதிகமான காரணமாயிருந்து, இவைகள் குழப்பத்தைக் கொடுக்கிறது. இப்படியாக, அடுத்து வரும் பாடங்களில் இந்த உடன்படிக்கைகளைக் குறித்து இன்னும் அதிக விளக்கமாகக் காண்போமாக.

# ஏப்ரல் மாத கேள்விகள்

1. 'நாம் மவுனமாயிருந்து பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்' என்றது யார்?
2. 'நீ இந்த காலத்தில் மௌனமாயிருந்தால், நீயும் உன் குடுமத்தாரும் அழிவீர்கள்' என யாரிடம் சொல்லப்பட்டது?
3. 'நான் சுவிசேஷத்தை பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ' என்றது யார்?
4. 'நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவியுங்கள்' என்றவர் யார்?
5. 'நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசமலிருக்கக்கூடாதே' என்றவர்கள் யார்?
6. 'கலகவீட்டாராகிய அவர்கள் கேட்டாலும், கேளாவிட்டாலும் சொல்லு' என்றவர் யார்?
7. 'நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே' என்று யார், யாரிடம் சொன்னது?
8. 'நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் உபதேசம் பண்ணுங்கள்' என்றவர் யார்?
9. சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் என்ன செய்ய வேண்டும்?
10. தம்முடைய ஆச்சரியமான ஒளியிடத்திற்கு வரவழைத்தருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படி தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி யார்?

பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-05-2017

அனுப்ப வேண்டிய முவகரி : சகோதரி. பேபி ராஜா
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

## மார்ச் மாத பதில்கள்

| | |
|---|---|
| 1. 1 ராஜ 17 : 9 | 2. லூக் 2 : 42; நியா 5 : 24 |
| 3. எபி 11 : 11; ரோமர் 4 :19 | 4. யாத் 15 : 20 |
| 5. 1 ராஜா 11 : 3 | 6. லூக் 21 :4; மாற் 12 :44 |
| 7. லூக் 10 : 39 | 8. மாற் 16 :9, 10 |
| 9. லூக் 8:3 | 10. பிலி 4:2,3 |

## மார்ச் மாத கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. டெய்சி தர்மராஜ் - புதுக்கோட்டை
2. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
3. Mrs. ரூபி ஜெபராஜ் - மதுரை
4. B. ஜாய்ஸ் ஜோசுவா - வெள்ளறம்
5. Mrs. காந்தா மனோகரன் - திருச்சி
6. Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
7. Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
8. Mrs. மெர்ஸி ஸ்டான்லி - மதுரை
9. தெபோராள் ஸ்டீபன் - சேலம்
10. G. பீற்றர் பால்ராஜ் - தூத்துக்குடி
11. R. ஞான சிரோன்மணி - சமயநல்லூர்
12. Mrs. ரேச்சல் தமிழரசி - மதுரை
13. Mrs. மேரி சாராள் - சமயநல்லூர்
14. Mrs. ஹெப்ஸி தாமஸ் - படப்பை
15. D. குளோரி திலகவதி - ஈரோடு
16. Sis.J. லில்லி புஸ்பம் - தூத்துக்குடி
17. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு - செங்கல்பட்டு
18. Dr.D.S. ஜெபநேசன் - திண்டுக்கல்
19. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்
20. Mrs. ஹெலன் திலக் - மதுரை
21. Mrs. ஒலிவ் தேவதாஸ் - சென்னை
22. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
23. J. ஜான்ஸி - ஆனைமலை
24. S. டேவிட் சாந்தகுமார் - நெல்லை
25. J. மாலதி - சீர்காழி
26. Mrs.D.I. அன்பு சுதந்திரம் - ஏர்வாடி
27. J. செல்வி ஜெயராஜ் - நாமக்கல்
28. Mrs. சுகந்தி ஜோன்ஸ் - திருச்சி
29. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
30. Mrs. அபி ஜெபராஜ் - படப்பை
31. Mrs. ரூபவதி - நெல்லை
32. Mrs. லில்லி ஆல்பர்ட் - நெல்லை
33. K. மோகன் - கொமராபாளையம்
34. Mrs. ஷோபியா தனராஜ் - திருச்சி
35. S. ஜெயராஜ் - பொள்ளாச்சி
36. R. சரோஜா - தென்கலம்
37. Mr. ஆனந்த கதிரோன் - சென்னை
38. S. சூசை மரியன் - சென்னை
39. S. பாக்கியராஜம் - மதுரை
40. Mrs. ஷீலா ரிச்சர்ட்தாஸ் - சென்னை
41. S. அசோக் பிரின்ஸ் - தூத்துக்குடி
42. A. ரோஸ்மேரி - சென்னை
43. கிறிஸ்டோபர் சாந்தகுமார் - மதுரை
44. Mrs. மேரி ராஜ் - மதுரை
45. Mrs. பியூலா ஜேசுராஜன் - புதுச்சேரி
46. S. பிரான்சிஸ் அசரியா - நெல்லை
47. கிறிஸ்டி ஜோசப் - நெல்லை
48. Mrs.S. செல்வி ஜான்ரோஸ் - நாகர்கோவில்
49. Mrs. சுந்திரமணி- திருப்பத்தூர்
50. Mrs. சாந்தா ஜெயக்குமார் - சென்னை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துகள் !

# 2017 மார்ச் – ஏப்ரல் மாத ஊழியங்கள் சில...



அந்தமானில் நடைபெற்ற J.C. சுவிஷேஷ பள்ளி மாணவர்களுடன் நமது ஆசிரியர்...







அந்தமானில் நடைபெற்ற J.C. சுவிஷேஷ பள்ளி மாணவர்களுக்கு பாடவேளையில் நமது ஆசிரியர்...

அந்தமான் J.C. சுவிஷேஷ பள்ளி மாணவர்களுக்கு ஹிந்தி மொழியில் பைபிள் பரிசளிக்கப்பட்டது.







கடந்த மாதத்தில் கர்த்தருடைய வசனத்திற்கு திருமுழுக்கில் கீழ்ப்படிந்தோர்...







நமது அஞ்சல்வழி பைபிள் பாடங்களை படித்துமுடித்தோர்க்கு முழுவேதாகமம் பரிசாக கொடுக்கப்பட்டது.

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th April 2017

# கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்








அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

# தபால் வழி பைபிள் பாடங்கள்





அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced)
பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து,
அழகிய சான்றிதழும் (Certificate)
முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!

# கைபிரதிகள்






உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு
கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில்
பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு

**92 4421 4421, 92 4431 4431**

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers